**வியக்கத்தக்க மாற்றம்!!**

**கே.கிருஷ்ணன்,**

**வக்கிரகாளியம்மன் தக்காளி கடை,**

**பண்ரூட்டி.**

**அலைபேசி: 9787177989**



---

நான் பண்ரூட்டி தினசரி சந்தையில் தக்காளி மொத்தம் மற்றும் சில்லரை வணிகம் செய்து வருகிறேன். கடந்த மூன்று மாதங்களாக எனக்கும் எனது தொழிலுக்கும் உங்களது விவசாயம் பல்கலைக்கழகத்தின் திட்ட ஆய்வாளர் மூலமாக எனது வியாபாரத்தின் விலை ஏற்ற இறக்கத்தினை நன்கு அறிந்துகொள்ள முடிந்தது. அது மட்டுமல்லாது வெளிச்சந்தையின் தக்காளி விலை நிலவரத்தினையும் எனது அலைபேசியின் உதவியினூட இருந்த இடத்திலிருந்தே உங்கள் டி.எம்.ஐ.(DMI) இயக்கத்தின் உதவியுடன் என்னால் தெரிந்துகொள்ள முடிகிறது.

இது போன்ற அலைபேசி சேவை வேளாண் விளைபொருட்களை குறிப்பாக காய்கறிகள் மற்றும் பழங்களை தகுந்த விலையினை நிர்ணயம் செய்து விற்க உதவுகிறது இந்த பண்ரூட்டி தினசரி சந்தையில் மட்டும் சுமார் 150 காய்கறி மற்றும் பழ கடைகள் உள்ளன. அதனை சார்ந்த எங்களை போன்ற வியாபாரிகளுக்கு இது மிகவும் ஒரு நல்ல சேவை அது மட்டுமல்லாது எங்களையும் மற்றும் இதர காய்கறி வியாபாரிகளையும் சார்ந்து இந்த பண்ரூட்டி நகரை சுற்றி உள்ள அனைத்து விவசாய நண்பர்களும் பயனடைகின்றனர்.

இங்கு பண்ரூட்டி மட்டுமல்லாது இதனை சுற்றியுள்ள திருக்கோவிலூர் நெல்லிக்குப்பம் அதனை சார்ந்த கிராமங்களிலிருந்தும் அந்த பகுதியிலுள்ள விவசாய தோழர்கள் எங்களது உதவியோடு தங்களது விலை பொருட்களை பண்ரூட்டி தினசரி சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர்.

தக்காளியின் உற்பத்தியை பொருத்தவரை மழை காலங்களில் குறைவாகவே இருக்கும். எங்களிடம் வரும் தக்காளியின் வரவை பொருத்தே விலையின் நிர்ணயம் செய்கிறோம். பண்ரூட்டி சந்தைக்கு தக்காளி பிளாஸ்டிக்

பெட்டியில் தான் நாங்கள் பய்னபடுத்தி வருகிறோம். இந்த பெட்டியின் அளவு 15KG ஆகும்.

தக்காளியில் இரண்டு ரகம் உள்ளன. நாட்டுத்தக்காளி, ஆப்பிள் தக்காளி (பெங்களூர் தக்காளி) இவை இரண்டையும் விற்பனை செய்து வருகிறோம். இந்த பண்ரூட்டி சந்தையின் பொருத்தமட்டில் நாட்டுத்தக்காளியின் விற்பனையே அதிகமாக இருக்கும். இது போன்ற காலகட்டத்தில் எங்களுக்கு வெளி சந்தை நிலவரம் சரிவர தெரியாமல் தினசரி நாளிதழ்களை மட்டுமே சார்ந்து இருந்தோம். ஆனால் இப்பொழுது தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தின் இயக்கமான டி.எம்.ஐ.(DMI) யின் உதவியுடன் தெரிந்து கொள்ள முடிந்தது.

இதற்காக நான் தங்களது பல்கலைக்கழகத்தின் டி.எம்.ஐ.(DMI) மற்றும் இந்த இயக்கத்தின் இயக்குனர் மற்றும் அலுவலர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அலைபேசி தகவலின் மூலம் எங்களால் சந்தைக்கு வரும் வணிகர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் தகுந்த விலையினை நிர்ணயம் செய்து அனைவருக்கும் உதவ முடிகிறது. மற்ற சந்தை நிலவரத்தினையும் தெரிந்து கொள்ள முடிகிறது இதற்காக மேலும் தங்களது நிறுவனத்தின் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
கே.கிருஷ்ணன்,
வக்கிரகாளியம்மன் தக்காளி வியாபாரம்
அலைபேசி: 9787177989